**கற்பிட்டி பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூலை 01 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 10 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களின் மூலம் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கற்பிட்டி பிரதேச சபையின் நிதி நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயற்பாடு மற்றும் காசோட்டத்தையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 37,146 பெறுமதியான ஊழியர் பிணை வைப்புகள் நிதிக்கூற்றுக்களிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஆ) தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித்தொகையான ரூபா 53,221 தொகை மின்சாரத்திற்கான வைப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

#### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 31,404,523 தொகையான ஆறு கணக்கு விடயங்களுக்குரித்தான பட்டோலை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29,362,676 தொகையானமையால் ரூபா 2,041,847 தொகையான இணக்கம் செய்யப்படாத மீதியொன்று காணப்பட்டது.

#### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 45,590,934 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,006,144 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,370,586 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 20,462,282 ஆகக் காணப்பட்டதுடன் ஒரு வருட காலத்திற்கு மேலான மீதிகளின் பெறுமதி ரூபா 11,317,728 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா .29,176,412 ஆகக் காணப்பட்டதுடன் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மீதிகளின் பெறுமதியான ரூபா13,586,633 தொகையும் மூன்று ஆண்டுகள் கடந்து மீண்டும் செலுத்தப்பட வேண்டிய வைப்புக்களின் பெறமதி ரூபா 7,443,792 தொகையுமாகக் காணப்பட்டது.

(இ) வழங்கப்பட்டு 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும் கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத பெறுமதி ரூபா 14,215 தொகையான காசோலைகள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 396(இ) ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையில் வைப்புச் செய்யப்பட்டிருந்த 2 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 8,638,373 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ரூபா 2,805,746 தொகையான வரித்தொகை உள்நாட்டு வருமான ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்படாது கையில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 311,896 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ஓய்வுபெற்ற மற்றும் கடமையை விட்டுச்சென்ற 59 ஊழியர்களிடமிருந்து 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக அறவிடப்படாது நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் பெறுமதி ரூபா123,715 ஆகக் காணப்பட்டது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,910 | 335 | 6,216 |
| (ii) | வாடகை | 5,515 | 4,000 | 9,111 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,007 | 2,029 | 81 |
| (iv) | ஏனைய வருமானம் | 16,560 | 10,288 | 7,472 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 129 (2) (அ) (ஆ) (ஊ) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்குக் கிடைக்கப்பெறவேண்டிய சகல வீதவரி, வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம், நீதிமன்றத் தண்டப்பணம் முத்திரைக்கட்டணத் தொகையான ரூபா 20,462,282 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 134 (2) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபைகளின் ஒரே பகுதிக்காக வீதவரி சதவீதம் 2 ஆக விதிக்கப்பட முடியாத போதிலும் சபையால் ஒரே பகுதியில் காணப்பட்ட வீட்டிற்காக 9 சதவீதமும் வியாபார நிலையத்திற்காக 12 சதவீதமுமாக வீத வரி விதிக்கப்பட்டிருந்தது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158 (1) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரப்பகுதியில் வீதவரியும் ஏக்கருக்கான வரியும் செலுத்தப்படாது விடும் நபர்களுக்குரித்தான நடைமுறையற்ற ஆதனங்கள் தடை செய்யப்பட்டு நிலுவைத் தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 3,879,666 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,592,533 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான பௌதீக வளங்கள்**

07 வாகனங்கள் மற்றும் ஏனைய உபகரண விடயங்கள் 01 வருடம் முதல் 07 வருடங்கள் வரையான காலப்பகுதியின் போது விளைவற்றுக் காணப்பட்டன.

**3.2 செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்படாதிருந்த 32 முற்பணங்களின் பெறுமதி ரூபா 303,524 தொகையானதுடன் இதில் 02 வருடங்களுக்கு மேலான 28 முற்பணங்களின் பெறுமதி ரூபா 281,524 ஆகக் காணப்பட்டது.

(ஆ) சபையால் ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகை தாமதமாகச் செலுத்தப்பட்டதன் காரணமாக சபைக்கு விதிக்கப்பட்டிருந்த ரூபா 11,962 தொகையான மிகைக்கட்டணம் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறு விதிக்கப்பட்டிருந்த மேலும் ரூபா 46,508 தொகையான மிகைக்கட்டணத்தைச் செலுத்துவதற்கிருந்தது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு